தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1984, மார்ச் 16, வெள்ளிக்கிழமை

பங்குனி 3, ருத்ராத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2015

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:

''இரவார் இரப்பார்க்கொன்று ஈவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்.''

கையால் தொழில் செய்து உணவு தேடி உண்ணும் இயல் புடைய தொழிலாளர், பிறரிடம் சென்று இரக்கமாட்டார். தம்மிடம் இரந்தவர்க்கு ஒளிக்காமல் ஒரு பொருள் ஈவார்.

1. வினாக்கள்— விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

சேலம் மாவட்டம் நங்கவல்லியில் துணை மின்நிலையம் அமைக்கும் திட்டம்.

*285—வினா எண் 18195—திரு. செ. செம்மலை: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் நங்கவல்லி துணை மின் நிலையத்திற்கான நில ஆர்ஜிதப் பணி எந்த நிலையில் உள்ளது?

(ஆ) அது எப்போது செயல்படத் துவங்கும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) சேலம் மாவட்டம் நங்கவல்லியில் ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்காக 4.56 ஏக்கர் நிலம் 14–10–82–ல் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது,

(ஆ) நங்கவல்லியில் மேற்கூறிய துணை மின் நிலையம் அமைக்கும் பணியினை 1984–85–ல் மேற்கொள்ள திட்டமிடப் பட்டுள்ளது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆரம்பிப்பதற்கு இருக்கிற இந்தத் துணை மின் நிலையத்தினுடைய கட்டுமானச் செலவு எவ்வளவு என்ற விவரத்தையும், அதனுடைய கெப்பாசிட்டி எவ்வளவு என்ற விவரத்தையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 96 லட்சம் ரூபாய் செலவில் 10 எம்.வி ஏ. திறன் கொண்ட இரண்டு மின் மாற்றிகளுடன் இந்நிலையம் அமைக்கப்படவுள்ளது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட துணை மின் நிலையத்தை நிறுவுவதால் வோல்டேஜ் இம்ப்ரூவ்மெண்டுக்கு ஒரு வாய்ப்பாக உள்ளது. இந்த அரசு எடுத்திருக்கிற, அதாவது நிறுவ இருக்கிற இந்த துணை மின் நிலையத்தினால், மின் இணைப்பு தமிழகத்தில் பரவலாக்கப்பட்டு, அதிக தூரம் எடுத்துச் செல்லவிருப்பதால், ஏற்படுகிற அந்த வோல்டேஜ் குறையை தவிர்ப்பதற்கும், அதேமாதிரி வோல்டேஜ் இம்ப்ரூவ்மெண்ட்டுக்கும் இப்படிப்பட்ட துணை மின் நிலையங்களை நம்முடைய மின்சார வாரியம் அதிகரிப்பதற்கு ஏதேனும் முயற்சிகள் மேற்கொண்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, இப் பகுதியைப் பொறுத்தவரையில் 393 தொழிற்சாலைகளுக்கு நல்ல மின் இணைப்புக் கொடுக்கவும், 119 தொழிற்சாலைகளுக்கு கூடுதலாக மின்பளு வழங்கவும் இத்துணை மின் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மின் விநியோகம் சீராக்கப்படும். தமிழகத்தில் வேறு பகுதிகளில் இத்தகைய மின் நிலையம் எங்கு அமைத்திருக்கிறார்கள் என்ற குறிப்பு தற்போது இல்லை.

திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துணை மின் நிலையம் இதேபோன்று தமிழகத்தில் எல்லா இடங்களிலும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? மின் அழுத்தம் குறைவாக உள்ள இடங்களில், விவசாய பம்ப் செட் மோட்டார்கள் பழுதடைவதால் இத்தகைய துணை மின் நிலையங்களை அதிகமாக ஏற்படுத்த உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இத்தகைய துணை மின் நிலையங்கள், சப்-ஸ்டேஷன்கள் தமிழகத்தில் ஏற்கெனவே பல இடங்களில் இருக்கின்றன. மேலும் பல இடங்களில் அவ்வப்போது தேவையானபோது ஏற்படுத்தப்படுகின்றன. இதற்கும் பம்ப் செட்டுகள் பழுதடைவதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நங்கவல்லியில் துணை மின் நிலையம் ஆரம்பிப்பதற்கு, நில ஆர்ஜிதம் செய்து கிட்டத்தட்ட $1\frac{1}{2}$ ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. இந்த ஆண்டு அதை

ஆரம்பிப்பதற்கு இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், இந்த காலதாமதத்திற்கு காரணம் என்ன? இந்த ஆண்டாவது ஆரம்பிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு விட்டதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, காரணம் பணம் பற்றாக்குறைதான்.

மின் பற்றாக்குறையால் தொழிற்சாலைகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கான திட்டம்.

286—*வினா 20474— திரு. சி. கணேசன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் பற்றாக்குறையால் தொழிற்சாலைகள் பாதிக்கப்படாமல் இருக்க, மாற்று ஏற்பாடுகளுக்கான செயல் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மற்றும் (ஆ) தமிழ் நாட்டில் மின்பற்றாக்குறை ஏற்படாவண்ணம் இருப்பதற்காக மின் உற்பத்தியை பெருக்கும்பொருட்டு, கீழ்க்கண்ட திட்டங்கள் தயாரித்து மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப் பட்டுள்ளது.—

1	வடசென்னை அனல் மின்நிலையம்	5	210 மெ.வா.
2	தூத்துக்குடி அனல் மின்நிலைய விரிவாக்கம்.	2	210 மெ.வா.
3	நெய்வேலி மூன்றாவது அனல் மின் நிலையம்.	5	210 மெ.வா.
4	எரிவாயு மின்திட்டம்.	6	50 மெ.வா.

5 இதைத் தவிர, கல்பாக்கம் விரிவாக்கம் மற்றும் இரண்டாவது அனல் மின்நிலையம் போன்ற திட்டங்களை தமிழ்நாட்டில் ஏற்படுத்த மத்திய அரசை இவ்வரசு தொடர்ந்து வற்புறுத்துகிறது.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. மின்பற்றாக்குறையால் தொழிற்சாலைகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு மாற்று ஏற்பாடுகள் செய்கின்ற முறையிலே வடசென்னை அனல் மின்நிலையம், நெய்வேலி, தூத்துக்குடி போன்ற மின்நிலையங்களை விரிவுபடுத்துவதற்கான திட்டத்தைத் தயாரித்து மத்திய அரசின் அனுமதி கோரி இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பஞ்சாலைகள்